நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல்முத்து, **L.L.M.,**

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **16-**ஆம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**450/2009**

**CNR.No.TNMD16-000248-2009**

...

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>மேலூர் காவல்நிலையம்<br>குற்ற எண்.516/2009 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | பாண்டி (எ) ரமேஷ்பாண்டி (வயது 37/2026)<br>த.பெ.துறை<br>நாகப்பன்பட்டி, மேலூர். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச.பிரிவு 379-ன் கீழ் |
| குற்றம் வனையப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவு 379-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | 22.07.2009 |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 14.09.2009 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | 1) U/s.70(2) Warrant Recall in Crl.M.P.No.1838 of 2024 = Allowed.<br>2) U/s.311 Cr.P.C in Crl.M.P.No.2405 of 2025 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 26.12.2017 | 13.10.2025 |
| PW2 | 26.12.2017 | Nil |
| PW3 | 12.04.2018 | Nil |
| PW4 | 12.04.2018 | Nil |
| PW5 | 07.06.2018 | Nil |
| PW6 | 07.06.2018 | 18.12.2024 |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:00:54 +0530

| | | |
|---|---|---|
| PW7 | 26.11.2018 | 26.11.2018 |
| PW8 | 23.06.2025 | 16.03.2026 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 06.04.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | 04.10.2023 to 26.04.2024 |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | எதிரி இ.த.ச பிரிவு 379-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, இவ்வழக்கில் எழுந்துள்ள ஒட்டுமொத்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி இ.த.ச பிரிவு 379-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில், வழக்கு சொத்தான RPR No.142/2009-ல் உள்ள வழக்கு சொத்துக்களை அதன் உரிமையாளரான இவ்வழக்கின் புகார்தாரர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அந்த வழக்கு சொத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே வைத்துக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது கடந்த 18.09.2009-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 16.04.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.O.K.மேகவர்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:00:58 +0530

<u>தீர்ப்புரை</u> **:-**

எதிரி மீது இ.த.ச பிரிவு 379-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 21.07.2009-ம் தேதி இரவு 20.00 மணிக்கு மேலூர் ஜோதி நகரில் குடியிருக்கும் வாதியின் வீட்டில் கட்டிப்போட்டு இருந்த 1) ரிட்டன் சர்ச்சி ஜாதி செவல் நிற கன்று -2, 2) ரிட்டன் சர்ச்சி ஜாதி கருப்பு நிற கிடேரி கன்று-3, 3) நாட்டு மயிலை காளங்கன்று-1, 4) இரு ஜாதி நாட்டு கிடேரி கன்று -1, மதிப்பு ரூ.70 ஆயிரம் உள்ள பதங்கன்றுகளை எதிரி தனக்கு லாபமும், வாதிக்கு நஷ்டமும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் திருடி சென்றுள்ளார். எனவே எதிரி இ.த.ச.பிரிவு 379-ன் படி தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்தவர்களாகிறார் என்று மேலூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.450/2009 ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழான எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, எதிரி மீது இ.த.ச.பிரிவு 379-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 11.04.2017 அன்று எதிரி மீது குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.3-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.4-ன் மூலம் அ.சா.ஆ.3-ம், அ.சா.6 மூலம் அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.6-ம், அ.சா.7-ன் மூலம் அ.சா.ஆ.7-ம், அ.சா.8-ன் மூலம் அ.சா.ஆ.8 முதல் அ.சா.ஆ.14 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>**4)** அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u> **:-**

**4.1)** அ.சா.1 அக்பர் தனது சாட்சியத்தில் அ.சா.1 அக்பர் தனது சாட்சியத்தில் புகார்தாரர்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:02 +0530

தனது தந்தை என்றும், தங்கள் வீட்டில் மொத்தம் 7 மாடுகள் இருந்தது என்றும், கடந்த 2009-ம் வருடம் ஒருநாள் மாலை சுமார் 5 மணியளவில் தன் தந்தை மாடுகளை வீட்டில் கட்டிவைத்துவிட்டு டீ கடைக்கு வந்து அங்கிருந்த தன் அம்மாவை வீட்டிற்கு அனுப்பி வைத்தார் என்றும், தன் அம்மா வீட்டில் வந்து பார்த்தபொழுது 7 மாடுகளையும் காணவில்லை என்றும், தான் வெளியில் வேலையிலிருந்தபோது தனது அப்பா தனக்கு போன்மூலம் தகவல் சொன்னார் என்றும், தான் ஒவ்வொரு ஊராக தேடி பார்த்தார் என்றும், மேலூரிலுள்ள அண்ணா காலனியில் உள்ள உலகநாதன் என்பவர் வீட்டில் கொம்பில்லாத செவலை காளை ஜெர்சி மாடு கட்டி வைக்கப்பட்டிருந்தது என்றும், அவரிடம் சென்று மாட்டை யார் கொண்டு வந்தது என்று கேட்டபொழுது துரைப்பாண்டி என்பவர் மாட்டை விலைக்கு கொடுத்ததாக சொன்னார் என்றும், பின்னர் தனது தந்தை புகார் கொடுப்பதற்காக காவல்நிலையம் சென்றுவிட்டு புகார் கொடுத்துவிட்டு திரும்பி வந்து தன்னை அழைத்துக்கொண்டு காவல்நிலையம் சென்றார் என்றும், ஏற்கனவே தன் தந்தை காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றும், தனது தந்தையின் கையொப்பம் தனக்கு தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் தனது தந்தையின் கையொப்பமாகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 ரோஜாபீவி தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகன் என்றும், புகார்தாரர் தனது கணவர் என்றும், எதிரியை தான் பார்த்ததில்லை என்றும், கடந்த சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 4 முதல் 5 மணியளவில் தன் கணவர் மாடுகளை மேய்த்துவிட்டு தங்கள் வீட்டில் கட்டி வைத்தார் என்றும், தான் வீட்டிற்கு சென்று பார்த்தபொழுது 7 கன்றுக்குட்டிகளையும் காணவில்லை என்றும், அவைகளில் 3 கருப்புநிற கன்றுகளும், ஒரு வெள்ளை காளைக்கன்றும், ஒரு பசு கன்று ஒன்று என்றும், செவலை நிறத்தில் இரண்டு கிடேரி கன்றுகளையும் காணவில்லை என்றும், உடனே தனது கணவரிடம் சொன்னார் என்றும், உடனே தனது கணவரும் மகனும் பல இடங்களில் தேடிப்பார்த்தனர் என்றும், அதில் ஒரு செவலைக்கன்றுக்குட்டி அண்ணாகாலனியில் உலகநாதன் வீட்டில் இருந்தது என்றும், அவரிடம் எப்படி கிடைத்தது என்று கேட்டதற்கு சிலோன்காலனியை சேர்ந்த பாண்டி என்பவர் தன்னிடம் விற்றதாக சொன்னார் என்றும், அந்த கன்றுக்குட்டியை போலீசார் தன்னிடம் வாங்கி கொடுத்தனர் என்றும், மற்ற 6 கன்றுகளும் சிலோன்காலனியில் பாண்டியின் தம்பி சரவணன் என்பவரின் வீட்டில் இருப்பதாக தன் கணவர் தன்னிடம் சொன்னார் என்றும், பின்பு தனது கணவர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும், மாடுகளையும், இதுவரை தாங்கள் வாங்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:07 +0530

**4.3)** அ.சா.3 ஆண்டிச்சாமி தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள 1-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 2009-ம் வருடம் ஜோதி நகரில் போலீசார் எழுதி கொண்டிருந்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக கையெழுத்து கேட்டதன் பேரில் தானும், சுரேஷ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டார்கள் என்றும், தனக்கு எழுத படிக்க தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.4)** அ.சா.4 சுரேஷ் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், கடந்த 2009-ம் வருடம் தனது வீட்டு பக்கத்தல் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகஜரில் தானும், ஆண்டிச்சாமியும் சாட்சிகளாக கையெழுத்து செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 உலகநாதன் தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியாது என்றும், அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு மேலூர் போலீஸ் ஒருவர் கறிக்கடைக்கு வந்து கையெழுத்து போடச்சொன்னார் என்றும், சாட்சி கையெழுத்து போடச்சொன்னதன்பேரில் போட்டார் என்றும், வேறு எதுவும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.6)** அ.சா.6 அய்யணன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 2 அத்தாட்சிகளில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது தான் என்றும், கடந்த 22.07.2009-ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு மேலூர் கல்லூரியின் அருகில் வைத்து மேலூர் காவல் ஆய்வாளர் எதிரியை கைது செய்து, பின்னர் எதிரியிடம் இருந்து 7 மாடுகளை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், கிராம நிர்வாக அலுவலர் ரவிச்சந்திரன் அவர்களும் சாட்சிகளாக கையெழுத்து செய்தார்கள் என்றும், அதன் பின்னர் எதிரி வீட்டிற்கு அழைத்து சென்று அவருடைய வீட்டில் இருந்து பணம் ரூ.4500/-ஐ எடுத்துக்கொடுத்தார் என்றும், பின்னர் காவல்நிலையம் கொண்டு வந்தார்கள் என்றும், செக் போஸ்டில் 3 கையெழுத்துக்கள் போட்டார் என்றும், மாடுகளை பிடித்ததற்கும், காசு எடுத்துக்கொடுத்ததற்கும் 3 கையெழுத்துக்கள் போட்டார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.6 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:11 +0530

**4.7)** அ.சா.7 கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 21.07.2009-ம் தேதி இரவு 8.00 மணிக்கு மேலூர் காவல்நிலைய குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது அப்துல்ரகீம் என்பவர் கொடுத்த புகாரைப்பெற்று குற்ற எண்.516/2009, இ.த.ச பிரிவு 379-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 என்றும், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அசலையும், நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணைக்கு காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார் என்றும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.8)** அ.சா.8 பாலாஜி தனது சாட்சியத்தில் கடந்த 22.07.2009-ம் தேதி மதுரை மாவட்டம், மேலூர் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது குற்ற எண்.516/2009 வழக்கினை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இட சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், சாட்சிகள் ஆண்டிச்சாமி, சுரேஷ் முன்னிலையில் சம்பவ இடம் சென்று காலை 9.30 மணிக்கு பார்வை மகஜர் அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் எதிரியை கைது செய்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் ரவிசந்திரன், அய்யனன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 என்றும், அதன் அடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் 16.15 மணிக்கு மேலூர் அண்ணாகாலனியில் மாவிலி மகன் உலகநாதன் வீட்டு முன் கட்டியிருந்து ஒரு கிடரி ஒன்று (ரிட்டன் ஷெர்சி வகை) அடையாளம் காட்ட அதே சாட்சி முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், 14.45 மணிக்கு பர்மா காலனி எதிரியின் தம்பி வீட்டருகில் வயல் அருகே உள்ள முள் செடியில் கட்டி போட்டு கிடந்த ரிட்டன் ஷெர்சி கிடரி கன்று ஒன்று, ரிட்டன் ஷெர்சி கருப்பு கிடரி கன்று மூன்று, நாட்டு மயிலை காளைக்கன்று ஒன்று, இரு சாதி நாட்டு பசு மாட்டு கன்று ஒன்று மொத்தம் 7, அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றி சாட்சி அய்யனன் கையொப்பம் செய்துள்ளார் என்றும், அந்த அத்தாட்சிகள் அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 என்றும், சாட்சிகள் உலகநாதன் உலகு ரவிச்சந்திரன் அய்யனன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து வழிக்காவலுடன் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார் என்றும், வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.13 படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார் என்றும், வழக்கு சொத்துக்களை அடையாளம் காட்டக்கூடிய புகைப்பட நகல் ஒன்று அ.சா.ஆ.14 என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் கிருஷ்ணன்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:17 +0530

என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது 31.08.2009-ம் தேதியன்று பிரிவு 379 இ.த.ச ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)**(ஆ)**-ன்** கீழான விசாரணை

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார். மேலும் அவர் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு**:**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் குற்றம் புரிந்துள்ளார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7)** எதிரி தரப்பில் வாதம் பின்வருமாறு**:**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8)** தீர்வு **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, கடந்த 21.07.2009-ம் தேதி இரவு 20.00 மணிக்கு மேலூர் ஜோதி நகரில் குடியிருக்கும் வாதியின் வீட்டில் கட்டிப்போட்டு இருந்த 1) ரிட்டன் சர்ச்சி ஜாதி செவல் நிற கன்று -2, 2) ரிட்டன் சர்ச்சி ஜாதி கருப்பு நிற கிடேரி கன்று-3, 3) நாட்டு மயிலை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:40 +0530

காளங்கன்று-1, 4) இரு ஜாதி நாட்டு கிடேரி கன்று -1, மதிப்பு ரூ.70 ஆயிரம் உள்ள பதங்கன்றுகளை எதிரி தனக்கு லாபமும், வாதிக்கு நஷ்டமும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் திருடி சென்ற குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** அ.சா.1 அக்பர் தனது சாட்சியத்தில் புகார்தாரர் தனது தந்தை என்றும், தங்கள் வீட்டில் மொத்தம் 7 மாடுகள் இருந்தது என்றும், கடந்த 2009-ம் வருடம் ஒருநாள் மாலை சுமார் 5 மணியளவில் தன் தந்தை மாடுகளை வீட்டில் கட்டிவைத்துவிட்டு டீ கடைக்கு வந்து அங்கிருந்த தன் அம்மாவை வீட்டிற்கு அனுப்பி வைத்தார் என்றும், தன் அம்மா வீட்டில் வந்து பார்த்தபொழுது 7 மாடுகளையும் காணவில்லை என்றும், தான் வெளியில் வேலையிலிருந்தபோது தனது அப்பா தனக்கு போன்மூலம் தகவல் சொன்னார் என்றும், தான் ஒவ்வொரு ஊராக தேடி பார்த்தார் என்றும், மேலூரிலுள்ள அண்ணா காலனியில் உள்ள உலகநாதன் என்பவர் வீட்டில் கொம்பில்லாத செவலை காளை ஜெர்சி மாடு கட்டி வைக்கப்பட்டிருந்தது என்றும், அவரிடம் சென்று மாட்டை யார் கொண்டு வந்தது என்று கேட்டபொழுது துரைப்பாண்டி என்பவர் மாட்டை விலைக்கு கொடுத்ததாக சொன்னார் என்றும், பின்னர் தனது தந்தை புகார் கொடுப்பதற்காக காவல்நிலையம் சென்றுவிட்டு புகார் கொடுத்துவிட்டு திரும்பி வந்து தன்னை அழைத்துக்கொண்டு காவல்நிலையம் சென்றார் என்றும், ஏற்கனவே தன் தந்தை காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றும், தனது தந்தையின் கையொப்பம் தனக்கு தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் தனது தந்தையின் கையொப்பமாகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "வழக்கு சம்மந்தமாக விவரம் தெரியுமா என்றால் கொஞ்சம் ஞாபகம் உள்ளது. எனது தந்தை எதற்காக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.” என்று அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தனக்கு திருட்டு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும், இறந்த தனது தந்தை எதற்காக புகார் கொடுத்தார் என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** அ.சா.2 ரோஜாபீவி தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகன் என்றும், புகார்தாரர் தனது கணவர் என்றும், எதிரியை தான் பார்த்ததில்லை என்றும், கடந்த சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 4 முதல் 5 மணியளவில் தன் கணவர் மாடுகளை மேய்த்துவிட்டு தங்கள் வீட்டில் கட்டி வைத்தார் என்றும், தான் வீட்டிற்கு சென்று

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:48 +0530

பார்த்தபொழுது 7 கன்றுக்குட்டிகளையும் காணவில்லை என்றும், அவைகளில் 3 கருப்புநிற கன்றுகளும், ஒரு வெள்ளை காளைக்கன்றும், ஒரு பசு கன்று ஒன்று என்றும், செவலை நிறத்தில் இரண்டு கிடேரி கன்றுகளையும் காணவில்லை என்றும், உடனே தனது கணவரிடம் சொன்னார் என்றும், உடனே தனது கணவரும் மகனும் பல இடங்களில் தேடிப்பார்த்தனர் என்றும், அதில் ஒரு செவலைக்கன்றுக்குட்டி அண்ணாகாலனியில் உலகநாதன் வீட்டில் இருந்தது என்றும், அவரிடம் எப்படி கிடைத்தது என்று கேட்டதற்கு சிலோன்காலனியை சேர்ந்த பாண்டி என்பவர் தன்னிடம் விற்றதாக சொன்னார் என்றும், அந்த கன்றுக்குட்டியை போலீசார் தன்னிடம் வாங்கி கொடுத்தனர் என்றும், மற்ற 6 கன்றுகளும் சிலோன்காலனியில் பாண்டியின் தம்பி சரவணன் என்பவரின் வீட்டில் இருப்பதாக தன் கணவர் தன்னிடம் சொன்னார் என்றும், பின்பு தனது கணவர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும், மாடுகளையும், இதுவரை தாங்கள் வாங்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** அ.சா.3 ஆண்டிச்சாமி தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள 1-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 2009-ம் வருடம் ஜோதி நகரில் போலீசார் எழுதி கொண்டிருந்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக கையெழுத்து கேட்டதன் பேரில் தானும், சுரேஷ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டார்கள் என்றும், தனக்கு எழுத படிக்க தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**14)** அ.சா.4 சுரேஷ் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், கடந்த 2009-ம் வருடம் தனது வீட்டு பக்கத்தல் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகஜரில் தானும், ஆண்டிச்சாமியும் சாட்சிகளாக கையெழுத்து செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " போலீசார் கேட்டதால் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது" என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**15)** அ.சா.5 உலகநாதன் தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியாது என்றும், அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு மேலுர் போலீஸ் ஒருவர் கறிக்கடைக்கு வந்து கையெழுத்து போடச்சொன்னார் என்றும், சாட்சி கையெழுத்து

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:53 +0530

போடச்சொன்னதன்பேரில் போட்டார் என்றும், வேறு எதுவும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** அ.சா.6 அய்யணன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 2 அத்தாட்சிகளில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது தான் என்றும், கடந்த 22.07.2009-ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு மேலூர் கல்லூரியின் அருகில் வைத்து மேலூர் காவல் ஆய்வாளர் எதிரியை கைது செய்து, பின்னர் எதிரியிடம் இருந்து 7 மாடுகளை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், கிராம நிர்வாக அலுவலர் ரவிச்சந்திரன் அவர்களும் சாட்சிகளாக கையெழுத்து செய்தார்கள் என்றும், அதன் பின்னர் எதிரி வீட்டிற்கு அழைத்து சென்று அவருடைய வீட்டில் இருந்து பணம் ரூ.4500/-ஐ எடுத்துக்கொடுத்தார் என்றும், பின்னர் காவல்நிலையம் கொண்டு வந்தார்கள் என்றும், செக் போஸ்டில் 3 கையெழுத்துக்கள் போட்டார் என்றும், மாடுகளை பிடித்ததற்கும், காசு எடுத்துக்கொடுத்ததற்கும் 3 கையெழுத்துக்கள் போட்டார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.6 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** ஆனால் அ.சா.6 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "நான் கிராம நிர்வாக அலுவலக உதவியாளராக பணிபுரிந்த காலங்களில் இதேபோன்று பல்வேறு வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நானும், இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ள கிராம நிர்வாக அலுவலரும் 3 கையொப்பம் இட்டதாக சொல்வதால் அதை காவல்நிலையத்தில் வைத்துதான் நாங்கள் கையொப்பம் இட்டோம் என்றால் சரிதான்.” என்று அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** அ.சா.7 கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 21.07.2009-ம் தேதி இரவு 8.00 மணிக்கு மேலூர் காவல்நிலைய குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது அப்துல்ரகீம் என்பவர் கொடுத்த புகாரைப்பெற்று குற்ற எண்.516/2009, இ.த.ச பிரிவு 379-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 என்றும், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அசலையும், நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணைக்கு காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார் என்றும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:01:57 +0530

**19)** அ.சா.8 பாலாஜி தனது சாட்சியத்தில் கடந்த 22.07.2009-ம் தேதி மதுரை மாவட்டம், மேலூர் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது குற்ற எண்.516/2009 வழக்கினை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இட சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், சாட்சிகள் ஆண்டிச்சாமி, சுரேஷ் முன்னிலையில் சம்பவ இடம் சென்று காலை 9.30 மணிக்கு பார்வை மகஜர் அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் எதிரியை கைது செய்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் ரவிசந்திரன், அய்யனன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 என்றும், அதன் அடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் 16.15 மணிக்கு மேலூர் அண்ணாகாலனியில் மாவிலி மகன் உலகநாதன் வீட்டு முன் கட்டியிருந்து ஒரு கிடரி ஒன்று (ரிட்டன் ஷெர்சி வகை) அடையாளம் காட்ட அதே சாட்சி முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், 14.45 மணிக்கு பர்மா காலனி எதிரியின் தம்பி வீட்டருகில் வயல் அருகே உள்ள முள் செடியில் கட்டி போட்டு கிடந்த ரிட்டன் ஷெர்சி கிடரி கன்று ஒன்று, ரிட்டன் ஷெர்சி கருப்பு கிடரி கன்று மூன்று, நாட்டு மயிலை காளைக்கன்று ஒன்று, இரு சாதி நாட்டு பசு மாட்டு கன்று ஒன்று மொத்தம் 7, அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றி சாட்சி அய்யனன் கையொப்பம் செய்துள்ளார் என்றும், அந்த அத்தாட்சிகள் அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 என்றும், சாட்சிகள் உலகநாதன் உலகு ரவிச்சந்திரன் அய்யனன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து வழிக்காவலுடன் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார் என்றும், வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.13 படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார் என்றும், வழக்கு சொத்துக்களை அடையாளம் காட்டக்கூடிய புகைப்பட நகல் ஒன்று அ.சா.ஆ.14 என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது 31.08.2009-ம் தேதியன்று பிரிவு 379 இ.த.ச ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.7 மற்றும் அ.சா.8-ன் சாட்சியம் புலன்விசாரணை குறித்து மட்டுமே புலப்படுகிறது.

**20)** இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியம் வழக்கு சொத்து திருடு போனது என்பது குறித்து மட்டுமே அமைந்துள்ளது. மேலும் இவ்வழக்கில் திருட்டு சம்பவத்தில் எதிரி தான் ஈடுபட்டார் என்பதை உறுதி செய்யும் வகையில் அரசு தரப்பில் எந்தவொரு கண்ணுற்ற

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:02:01 +0530

சாட்சியும் முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுள்ளது. பொதுவாக திருட்டு வழக்குகளில் நேரடி சாட்சிகள் இல்லாத நிலையில் சூழ்நிலை சாட்சிகள் தான் இவ்வழக்கின் முக்கிய சாட்சி ஆகும். மேலும் அ.சா.8-ன் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றியதாக சொல்லப்படும் நிலையில் எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பதற்கு ஆதரவாக அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.6-ன் சாட்சியம் அமையவில்லை. மேலும் மற்றொரு அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்த பட்டியல் சாட்சி-7 ரவிச்சந்திரன் இறந்துவிட்டதனால் அவரை இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக விசாரிக்கவில்லை.

**21)** மேலும் மாண்புமிகு கல்கத்தா உயர்நீதிமன்றம் Parikshit kander @ Kandar -vs- State of West Bengal என்ற வழக்கில் "Evidence of witness who have sought to prove the confession or inconsistant and contratictory to one another. Witnesses need not re produce the exact words of the confessor to prove a confession. But if the version confession of the witness with regard to the contents of the confession or the contratictory to one another, it would be difficult to persuade oneself that the confession has been proved”. மேற்கண்ட முன் தீர்ப்பின் நெறிமுறைகளை பின்பற்றுகையில் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**22)** மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம், Nilesh Baburao Gitte -vs- State of Maharastra என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

This case rests entirelv on circumstantial evidence. This Court has, time and again, reiterated the five golden principles to be kept in mind while appreciating a case based on circumstantial evidence. In Sharad Birdhichand Sarda vs. State of Maharashtra, (1984) 4 SCC 116. this Court held as under:-

"153. A close analysis of this decision would show that the following conditions must be fulfilled before a case against an accused can be said to be fully established:

"(1) the circumstances from which the conclusion of guilt is to be drawn should be fully established.

It may be noted here that this Court indicated that the circumstances concerned "must or

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Date: 2026.04.16 08:02:06 +0530

should" and not "may be" established. There is not only a grammatical but a legal distinction between "may be proved" and "must be or should be proved" as was held by this Court in Shivaji Sahabrao Bobade v. State of Maharashtra [(1973) 2 SCC 793] where the observations were made:

"Certainly, it is a primary principle that the accused must be and not merely may be guilty before a court can convict and the mental distance between may be' and 'must be' is long and divides vague conjectures from sure conclusions.'

(2) the facts so established should be consistent only with the hypothesis of the guilt of the accused, that is to say, they should not be explainable on any other hypothesis except that the accused is guilty,

(3) the circumstances should be of a conclusive nature and tendency, (4) they should exclude every possible hypothesis except the one to be proved, and (5) here must be a chain of evidence so complete as not to leave any reasonable ground for the conclusion consistent with the innocence of the accused and must show that in all human probability the act must have been done by the accused."

**23)** மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Shailendra Rajdev Pasvan and others -vs- State of Gujarat and others என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"Thus, the entire case of the prosecution is based on the circumstantial evidence. It is well settled that in a case which rests on circumstantial evidence, law postulates two fold requirements:

i) every link in chain of the circumstance necessary to establish the guilt of the accused must be established by the prosecution beyond reasonable doubt,

ii) All the circumstances must be consistent pointing only towards the guilt of the accused".

**24)** மேற்படி முன்தீர்ப்புகளின் அடிப்படையில் இவ்வழக்கில் எதிரி தான் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசு தரப்பில் சூழ்நிலை சாட்சிகள் மட்டும் உள்ள நிலையில் அந்த சூழ்நிலை சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் முன்னுக்குப்பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். அதனால் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை சங்கிலி தொடர்பின்படி அரசு தரப்பில் சந்தேகத்திற்கு

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:02:11 +0530

அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**25)** முடிவாக, இவ்வழக்கில் எழுந்துள்ள ஒட்டுமொத்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி இ.த.ச பிரிவு 379-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**26)** இவ்வழக்கில், வழக்கு சொத்தான RPR No.142/2009-ல் உள்ள வழக்கு சொத்துக்களை அதன் உரிமையாளரான இவ்வழக்கின் புகார்தாரர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அந்த வழக்கு சொத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே வைத்துக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:02:15 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 26.12.2017 | அக்பர் |
| அ.சா.2 | 26.12.2017 | ரோஜாபீவி |
| அ.சா.3 | 12.04.2018 | ஆண்டிச்சாமி |
| அ.சா.4 | 12.04.2018 | சுரேஷ் |
| அ.சா.5 | 07.06.2018 | உலகநாதன் |
| அ.சா.6 | 07.06.2018 | அய்யணன் |
| அ.சா.7 | 26.11.2018 | கிருஷ்ணன் |
| அ.சா.8 | 23.06.2025 | பாலாஜி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.3-ன் 1-வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.4-ன் 2-வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 22.07.2009 14.15 மணிக்கு தயார் செய்த அத்தாட்சியில் உள்ள அ.சா.6-ன் சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 22.07.2009 14.45 மணிக்கு தயார் செய்த அத்தாட்சியில் உள்ள அ.சா.6-ன் சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.11 | 22.07.2009 14.15 மணிக்கு தயார் செய்த அத்தாட்சி |
| அ.சா.ஆ.12 | 22.07.2009 14.45 மணிக்கு தயார் செய்த அத்தாட்சி |
| அ.சா.ஆ.13 | படிவம் 95 |
| அ.சா.ஆ.14 | வழக்கு சொத்துக்களை அடையாளம் காட்டக்கூடிய புகைப்பட நகல் ஒன்று |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை</u>

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்,</u>
<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:** இல்லை
<u>குறிப்பு</u>
1) வழக்கு விசாரணைகாலத்தில், எதிரி நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்கள்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.16 08:02:21 +0530